



# ஹர ஹர சங்கரா

FREE COPY

Jan - 2025 Vol. 4 - ISSUE 03




# KODAMBAKKAM TIMES

# "வாழ்க்கை எனக்குப் போதித்தது என்ன?"

-- பெரியவா

ஒரு நாள் ராத்திரி நேரம், ஊரே உறங்கிக்கொண்டிருந்த வேளை, சுப்பிரமணிய சாஸ்திரிகள் வீட்டில் குழந்தை சுவாமிநாதன், அம்மாவின் அரவணைப்பில் அசந்து தூங்கிக் கொண்டிருக்க திடீரென்று ஏதோ சத்தம். பாத்திரங்கள் உருளும் ஒலி, தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எழுந்து விடுகிறார்கள். பக்கத்து வீட்டிலிருப்பவர்களும் கம்பு, கடப்பாரை என்று கையில் கிடைத்ததைத் தூக்கிக் கொண்டு வந்துவிடுகிறார்கள்.

விழித்துக்கொண்ட சுவாமிநாதனுக்கு பயம் பற்றிக்கொள்கிறது, கால்கள் நடுங்குகின்றன, அறையில் இருந்த ஸ்டூல் மேல் ஏறிக் கொண்டுவிட தைரியசாலிகள் நான்கைந்து பேர் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு கதவைத் திறந்து உள்ளே போகிறார்கள்.



அறைக்குள் ஒரு மரநாய் தன் தலையை ஒரு பாத்திரத்துக்குள் நுழைத்து சிக்கிக்கொண்டு அதிலிருந்து விடுபட முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தது. மரநாயை பிடித்துத் தூணில் கட்டுகிறார்கள். நாயை இருவர் பிடிக்க, பாத்திரத்தை இருவர் பற்றி இழுக்க மரநாய் விடுபடுகிறது. அதற்கு மூச்சுத் திணறுகிறது. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அந்த மரநாயை இழுத்துப் போய் ஊருக்கு வெளியே விட்டு விடுகிறார்கள். சுவாமிநாதனுக்கு பயம் விலகியது, மகனுக்கு அம்மா தீர்த்தம் கொடுத்தாள்.

பாத்திரத்தில் வெல்லம் வைக்கப் பட்டிருந்தது, பேராசைப்பட்டு அதை ருசி பார்க்க வந்த மரநாய் தலையைப் பாத்திரத்துக்குள் நுழைத்திருக்கிறது. பின்பு விடுவித்துக் கொள்ள இயலாமல் தவித்திருக்கிறது. பாவம் அந்த ஜீவன் ஆசைப்பட்டது வெல்லத்துக்காக அது கிடைக்கவில்லை. துன்பம் மட்டுமே மிஞ்சியது. வீட்டிலும், அக்கம் பக்கத்திலும் இருந்தவர்களுக்குத் தூக்கம் தடைப்பட்டது தான் மிச்சம்.

குழந்தையை மடியிலிட்டுக் கொண்ட தாய் "சுவாமிநாதா அழியக்கூடிய பொருள்கள் மீது நாம் ஆசைவைக்கவே கூடாது. பாவம் அந்த நாய் வெல்லத்துக்கு ஆசைப்பட்டு எத்தனை கஷ்டம் அனுபவிச்சது பார்த்தியா?" என்று பெரிய தத்துவத்தைப் பிஞ்சு மனதில் புகட்டினாள். சுவாமிநாதனுக்குப் புரிந்தும் புரியாதது போல் இருந்தது. தூக்கம் கண்களைச் செருகியது.

விடியற்காலை மகாலட்சுமி எழுந்து கொண்டுவிட்டாள் வாசலில் சாணம்

தெளித்துக் கோலம் போட்டாள். ஸ்நானம் செய்துவிட்டு வந்து நெற்றியில் திலக மிட்டுக்கொண்டு பூஜை அறையில் ஸ்லோகங்கள் முணுமுணுத்துக் கொண்டே சுவாமி படங்களை புஷ்பங்களால் அலங்கரித்தாள், ஊதுவத்தி ஏற்றினாள்.

கண்களைக் கசக்கிக்கொண்டே வந்த சுவாமிநாதனிடம் மணி எடுத்துக் கொடுத்தாள். கற்பூரத்தை ஏற்றி சுவாமி படங்களுக்குக் காட்டினாள். குளித்து முடித்துவிட்டு வந்த சுப்பிரமணிய சாஸ்திரிகள், தீபத்தை உள்ளங்கையால் தொட்டு சுவாமிநாதனின் கண்களில் ஒற்றி எடுத்தார்.

காளஹஸ்தியில் நடந்த சதஸ் ஒன்றின்போது தான் கற்ற வாழ்க்கைப்பாடத்தை போதித்துவிட்டு மணி அடித்து தீபாராதனை செய்வதில் புதைந்துள்ள தத்துவத்தையும் விளக்கியிருக்கிறார் மகா பெரியவர்.

"தீபாராதனைக்கு முன், திரை போடுவதில் ஓர் அர்த்தம் இருக்கிறது. நாம் ஏதோதோ நினைவுகளில் மனதை அலையவிட்டுக் கொண்டிருப்போம். அப்போது சட்டென்று மணியோசை கேட்டதும் நம் காதுகளைத் தீட்டிக்கொள்கிறோம். இதர அநாவசிய சத்தங்கள் நம் காதில் விழுவதில்லை. அடுத்த கணம் திரை விலகுகிறது. நம் கண்கள் தேவையற்ற வேறு காட்சிகளைக் காணாதபடி தீபாராதனையின் ஒளி நம் கவனத்தைக் கவருகிறது.

கண்ணும் காதும் ஒரே இடத்தில் லயிப்பதுடன், மனத்தையும் அதே இடத்தில் நிலைபெறச் செய்வதுதான் (concentration) பூஜையின் பலன். அதனால்தான் கோயில்களிலும், இதர இடங்களிலும் பூஜையின்போது மணியடித்து, கற்பூர ஆரத்தி காட்டுகிறார்கள்.

அபார கருணா சிந்தும் ஞானதம் சாந்த ரூபிணம்
ஸ்ரீ சந்திரசேகர குரும் ப்ரணமாமி முதான்வஹம்

ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர

**விஷ்ணு பகவானின் அவதாரங்கள் எல்லாம் அதர்மத்தை அழிப்பதற்கானவை. ஆனால் நரசிம்ம அவதாரம் மட்டும் பக்தனைக் காப்பாற்றுவதற்கானது. இந்த திருக்கோலத்தைக்காண விரும்பிய நாரதர், வருணன் போன்றோர் தென்பாண்டி நாட்டில் சித்ரா நதிக்கரையில் பல்லாண்டு தவமிருந்தனர். இதனால் மகிழ்ந்த விஷ்ணு பூமிதேவி, ஸ்ரீதேவி சகிதம் பதினாறுகரங்களுடன் உக்கிர நரசிம்மராக சத்திரிய சிகாமணி என்ற தலத்தில் காட்சியளித்தார். சேவித்து பணிந்த நாரதரும் மற்றவர்களும் அந்தத் தலத்திலேயே நிரந்தரமாக கோயில் கொண்டு அருள்பாலிக்கும்படி வேண்டினர். அந்தத் தலமே இன்று தென்காசி மாவட்டத்தில் உள்ள கீழப்பாவூர்.**



# பெரியவர்கள் காலில் விழுந்து ஆசி பெறுவது ஏன்?

அஸ்வத்தாமன், மகாபலி, வியாசர், அனுமன், விபீஷணன், கிருபாச்சாரியார், பரசுராமன், மார்கண்டேயன் ஆகியோர் சப்த சிரஞ்சீவிகள் எனப்படுவர்.

மரணமில்லாப் பெருவாழ்வு எய்தியிருக்கும் இவர்களின் பூதவுடல் நம் கண்ணில் படவில்லை என்றாலும் இன்னும் இந்தப் பூமியில் உலவிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

இந்த சிரஞ்சீவிகளில் ஒரு பிரபலம் மார்கண்டேயன்.

இவனைக் காப்பாற்ற வேண்டி சிவபெருமானே காலனை காலால் உதைத்தார். எமனுக்கு பயந்து 12 வயதே நிரம்பிய மார்கண்டேயன் சிவபெருமானிடம் தஞ்சம் புகுந்ததும், அவர் காலனை காலால் உதைத்து மார்கண்டேயனை காத்தருளியதும் அநேகருக்கு தெரிந்திருக்கும்.

மார்கண்டேயனுக்கு மட்டும் அது எப்படி சாத்தியமாயிற்று என்று தெரியுமா?

மார்கண்டேயனுக்கு 12ஆம் வயதில் மரணம் சம்பவிக்கும் என்றும், அவனுக்கு அல்பாயுசு தான் என்றும் அவன் தந்தையான மிருகண்ட மகரிஷிக்கு தெரியும்.

ஆகையால் மகனை காக்க விரும்பிய மிருகண்ட முனிவர் அவனுக்கு உபநயனம் செய்வித்த பின்னர் "பெரியோர்கள் எவரை சந்தித்தாலும் தயங்காது அவர்கள் காலில் விழுந்து நமஸ்கரித்து அவர்களது ஆசிகளை பெற்றுக் கொள்" என்று சொல்லியிருந்தார்.

மார்க்கண்டேயனும் தான் பார்க்கும் பெரியவர்கள் காலில் எல்லாம் விழுந்து, விழுந்து ஆசி பெற்று வந்தான்.

ஒரு முறை அத்திரி, வசிஷ்டர், கவுதமர், கஷ்யபர், பரத்வாஜர், விஸ்வாமித்திரர், ஜமதக்னி ஆகிய சப்தரிஷிகள் மிருகண்ட முனிவரின் ஆஸ்ரமத்திற்கு வந்தனர். அவர்களின் பாதங்களில் மார்கண்டேயன் பணிந்தான்.

அப்போது அவர்கள் தீர்க்காயுஷ்மான் பவ (தீர்க்காயுளுடன் வாழ்க) என்று வாழ்த்தி விட்டார்கள். பிறகு தான் தெரிந்து கொள்கிறார்கள் அவனுக்கு 12 வது வயதில் மரணம் சம்பவிக்கும் என்று.

என்றும் சத்தியத்தையே பேசும் சப்தரிஷிகளின் வாக்கு பொய்க்குமா? இருப்பினும் இந்தப் பிரச்னையை பிரம்மாவிடம் சொல்வதற்காக செல்கிறார்கள்.

மார்க்கண்டேயனும் அவர்களுடன் செல்கிறான். போனவன் பிரம்மாவின் காலிலும் விழுந்து ஆசி பெற்று விட்டான். விதியை எழுதிய அவரும் அவனுக்கு தீர்க்காயுஷ்மான் பவ என்று வாழ்த்தி விட்டார்.

இப்படி பார்க்கும் பெரியவர்கள் எல்லாம் அவனுக்கு ஆசி வழங்கவே அவர்கள் ஆசி அனைத்தும் சேர்ந்து அவனது தலையெழுத்தையே மாற்றிவிடுகிறது. பெரியவர்களின் ஆசியை நிறைவேற்றுவது பரம்பொருளின் கடமை.




ஆகவே தான் சிவபெருமான் தோன்றி மார்கண்டேயனை காத்ததோடு மட்டுமில்லாமல் அவன் என்றும் 16 வயதாக, அதாவது சிரஞ்சீவியாக இருப்பான் என்று வரம் தருகிறார். பெரியவர்களை விழுந்து வணங்குவது என்பது நமது பாரம்பரியங்களில் ஒன்று.

பகவான் கிருஷ்ணர் தம்மினும் பெரியவர்களை கண்டால் தவறாது விழுந்து வணங்குவார். எனவே வயதிலும் தகுதியிலும் சிறந்து விளங்கும் பெரியோர்களை கண்டால் அவர்களை விழுந்து வணங்கி அவர்களது ஆசியைப் பெறவேண்டும். அது உங்களை காக்கும் அரண் மட்டுமல்ல, உங்களது தலையெழுத்தையே மாற்றிவிடும்.

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

KODAMBAKKAM TIMES

MAMBALAM & T NAGAR EDITION

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

K K NAGAR & VADAPALANI EDITION

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

044 2484 4114 / 93826 82128 / 89390 70034

E-mail : kodambakkamtimes@yahoo.com

# பெருமாள் கோயில் தீர்த்தம்



பெருமாள் கோயில் தீர்த்தம் நோய்களை நீக்கும் வல்லமை கொண்ட சஞ்சீவி மருந்து என்று கருதப்படுகிறது.

ஏலம், இலவங்கம், வால்மிளகு, ஜாதிப்பத்திரி, பச்சைக் கற்பூரம் இவைகளில் முதல் நான்கும் வகைக்கு ஒரு பங்கும், பச்சைக் கற்பூரம் கால் பங்கும் சேர்க்கவும்.

முதல் நான்கு பொருள்களையும் உலர்த்தி இடித்து பொடித்துக் கொள்ளவும். பிறகு பச்சைக் கற்பூரத்தையும் பொடித்து இதனுடன் கலந்து கொள்ளவும். இதனை பதனம் செய்து பூஜை அறையில் வைக்கலாம்.

இந்த தீர்த்தப் பொடியை திரிகடி (மூன்று விரல் அளவு) எடுத்து ஒரு தாமிர தம்ளரில் தண்ணீரில் கலந்து முதல் நாள் இரவு வைத்து மறு நாள் காலை வெறும் வயிற்றில் பூஜை முடித்தவுடன் அருந்த சகல நோய்களும் எளிதில் நீங்கி உடல் பலம் பெறும்.

சைவ வழிபாட்டில் உள்ளவர்கள் வில்வம் சேர்த்தும், வைணவ வழி பாட்டில் உள்ளவர்கள் துளசி சேர்த்தும் அருந்தலாம். இருதயம், இரப்பை பலம் பெறும். கண்கள் பற்றிய நோய் யாவும் நீங்கும். நரம்புத்தளர்ச்சி, சளி நீங்கும், பித்த நோய்கள், வாந்தி, தலைசுற்றல், மயக்கம், வாய்க்கசப்பு தீரும்.

# மந்த்ர புஷ்பம் என்றால் என்ன



மந்த்ர புஷ்பம் என்பது ஒரு வேத பாடலாகும். இது புஜைகளின் முடிவில் இந்து தெய்வங்களுக்கு மலர்களை சமர்ப்பிக்கும் நேரத்தில் பாடப்படுகிறது. மந்திரம் என்பது வேத மந்திரங்களின் மலராக கருதப்படுகிறது.

இந்த மந்திரம் யஜூர் வேதத்தின் தைத்திரிய ஆரண்யகத்திலிருந்து எடுக்கப்பட்டது. நீர், நெருப்பு, காற்று, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மேகங்கள் மற்றும் நேரம் பற்றிய இரகசிய அறிவால் வழங்கப்படும் வரம்பற்ற நன்மைகளைப் பற்றி இது பேசுகிறது. இது பொதுவாக எந்த பூஜை (வழிபாடு) அல்லது யாகம் செய்த பிறகு அனைத்து ப்ரோகிதர்களாலும் பாடப்படுகிறது. நீர் இந்த பிரபஞ்சத்தின் அடிப்படை என்று சுருக்கமாகச் சொல்கிறது.

மந்திர சக்தியை உடைய புஷ்பம் என்று சொல்வதை விட, மந்திர உச்சாடனத்தின் மூலம் சக்தி பெற்ற பூக்களைக் கொண்டு வணங்குவது என்று புரிந்துகொள்ளலாம். ஆலயத்தில் அபிஷேகம், அலங்காரம், ஷோடஸ உபச்சாரங்களையும் இறைவனுக்கு செய்து முடித்த கையோடு "யோபாம் புஷ்பம் வேத..." என்று ஆலயத்தில் அர்ச்சகரின் குரல் கணீரென்று ஒலிக்கும்போது மெய் சிலிர்க்கும். ஒவ்வொரு கால பூஜையின்போதும் மகாதீபாராதனைக்கு முன்னதாக ஆலயங்களில் ஓதப்படும் இந்த மந்த்ரபுஷ்பம் என்கிற வேத மந்திரம் அத்தனை மகத்துவம் வாய்ந்தது. பொருள் புரியாதவர்கள் கூட அந்த மந்திரத்தின் ஸ்வரத்திலும், உச்சரிப்பிலும் மெய்மறந்து மனம் உருகி நிற்பர்.

நம் இல்லங்களில் நடைபெறும் பூஜையின் போதும் ஏற்ற இறக்கத்தோடு அதற்குரிய ஸ்வரத்தில் சாஸ்திரிகள் இந்த மந்திரபுஷ்பத்தை உச்சாடனம் செய்யும்போது நாமும் அவரோடு இணைந்து சொல்வது போன்ற ஒரு உள்ளுணர்வு நமக்குள் உண்டாவதை உணர முடியும். எல்லாவிதமான பூஜைகளின் போதும் அதன் உச்சக்கட்டத்தில் முத்தாய்ப்பாக இந்த மந்த்ரபுஷ்பத்தைச் சொல்கிறார்களே அப்படி என்னதான் சிறப்பு இதற்கு என்பதை

தெரிந்து கொள்வோம்.

நீரின்றி அமையாது உலகு என்பது வள்ளுவன் வாக்கு. இந்த நீர்தான் உலகின் அடிப்படை ஆதாரம் என்பதையே இந்த மந்திரம் வலியுறுத்துகிறது. நீர், நெருப்பு, காற்று, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மேகங்கள் போன்ற இயற்கை சக்திகளுக்கு இடையே உள்ள தொடர்பினை நாம் அறிந்துகொள்ளும் விதமாக இந்த வாக்கியங்கள் அமைந்திருக்கின்றன.

**மந்திர புஷ்பம்**

ஓம் யோபாம் புஷ்பம் வேத புஷ்பவான் ப்ரஜாவான் பஸூமான் பவதி
சந்த்ரமா வா அபாம் புஷ்பவான் ப்ரஜாவான் பஸூமான் பவதி ய ஏவம் வேத

**விளக்கம்**

யாரொருவன் நீரின் மலரை அறிகிறானோ, அவன் மலர்களை உடையவனாக, மிருகங்களை உடையவனாக, சந்ததிகளை உடையவனாக ஆகிறான். நிலவே நீரின் மலர். யார் இவ்வாறு அறிகிறானோ அவன் சந்ததிகளை உடையவனாக, மிருகங்களை உடையவனாக ஆகிறான்.

யோபாமாயதனம் வேத ஆயதனவான் பவதி அக்னிர்வா அபாமாயதனம்
ஆயதனவான் பவதி யோக்னேராயதனம் வேத ஆயதனவான் பவதி
ஆபோ வா அக்னேராயதனம் ஆயதனவான் பவதி ய ஏவம் வேத

**விளக்கம்**

யாரொருவன் நீரின் ஆதாரத்தை அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். நெருப்பே நீரின் ஆதாரம். எவன் நெருப்பின் ஆதாரத்தை அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். நீரே நெருப்பின் ஆதாரம். யார் நீரின் ஆதாரத்தை இப்படி அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான்.

யோபாமாயதன் வேத ஆயதனவான் பவதி வாயுர்வா அபாமாயதனம்
ஆயதனவான் பவதி யோ வாயோராயதனம் வேத ஆயதனவான் பவதி
ஆபோ வை வாயோராயதனம் ஆயதனவான் பவதி ய ஏவம் வேத

**விளக்கம்**

யாரொருவன் நீரின் ஆதாரத்தை அறிகிறானோ, அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். காற்றே நீரின் ஆதாரம். யார் காற்றின் ஆதாரத்தை அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். நீரே காற்றின் ஆதாரம். யார் நீரின் ஆதாரத்தை இப்படி அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான்.

யோபாமாயதன் வேத ஆயதனவான் பவதி அஸௌ வை தபன்னபாமாயதனம்
ஆயதனவான் பவதி யோமுஷ்ய தபத ஆயதனம் வேத ஆயதனவான் பவதி
ஆபொ வா அமுஷ்ய தபத ஆயதனம் ஆயதனவான் பவதி ய ஏவம் வேத

**விளக்கம்**

யாரொருவன் நீரின் ஆதாரத்தை அறிகிறானோ, அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். கொதிக்கும் சூரியனே நீரின் ஆதாரம். யார் கொதிக்கும் சூரியனின் ஆதாரத்தை அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். நீரே அந்த தகிக்கும் சூரியனின் ஆதாரம். யார் நீரின் ஆதாரத்தை இப்படி அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான்.

யோபாமாயதன் வேத ஆயதனவான் பவதி சந்த்ரமா வா அபாமாயதனம்
ஆயதனவான் பவதி யச்சந்த்ரமஸ ஆயதனம் வேத ஆயதனவான் பவதி
ஆபோ வை சந்த்ரமஸ ஆயதனம் ஆயதனவான் பவதி ய ஏவம் வேத

**விளக்கம்**

யாரொருவன் நீரின் ஆதாரத்தை அறிகிறானோ, அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். நிலவே நீரின் ஆதாரம். யார் நிலவின் ஆதாரத்தை அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். நீரே நிலவின் ஆதாரம். யார் நீரின் ஆதாரத்தை இப்படி அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான்.

யோபாமாயதன் வேத ஆயதனவான் பவதி நக்ஷத்ராணி வா அபாமாயதனம்
ஆயதனவான் பவதி யோ நக்ஷத்ராணாமாயதனம் வேத ஆயதனவான் பவதி
ஆபோ வை நக்ஷத்ராணா மாயதனம் ஆயதனவான் பவதி ய ஏவம் வேத

**விளக்கம்**

யாரொருவன் நீரின் ஆதாரத்தை அறிகிறானோ, அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். நட்சத்திரங்களே நீரின் ஆதாரம். யார் நட்சத்திரங்களின் ஆதாரத்தை அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். நீரே நட்சத்திரங்களின் ஆதாரம். யார் நீரின் ஆதாரத்தை இப்படி அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான்.

யோபாமாயதன் வேத ஆயதனவான் பவதி பர்ஜன்யோ வாஅபாமாயதனம்
ஆயதனவான் பவதி ய : பர்ஜன்யஸ்யாயதனம் வேத ஆயதனவான் பவதி
ஆபோ வை பர்ஜன்யஸ்யாயதனம் ஆயதனவான் பவதி ய ஏவம் வேத

**விளக்கம்**

யாரொருவன் நீரின் ஆதாரத்தை அறிகிறானோ, அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். மேகமே நீரின் ஆதாரம். யார் மேகங்களின் ஆதாரத்தை அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். நீரே மேகங்களின் ஆதாரம். யார் நீரின் ஆதாரத்தை இப்படி அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான்.

யோபாமாயதன் வேத ஆயதனவான் பவதி ஸம்வத்ஸரோ வா அபாமாயதனம்
ஆயதனவான் பவதி யஸ்ஸம்வத்ஸரஸ்யாயதனம் வேத ஆயதனவான் பவதி
ஆபோ வை ஸம்வத்ஸரஸ்யாயதனம் ஆயதனவான் பவதி ய ஏவம் வேத

**விளக்கம்**

யாரொருவன் நீரின் ஆதாரத்தை அறிகிறானோ, அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். மழைக்காலமே நீரின் ஆதாரம். யார் மழைக்காலத்தின் ஆதாரத்தை அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான். நீரே மழைக்காலத்தின் ஆதாரம். யார் நீரின் ஆதாரத்தை இப்படி அறிகிறானோ அவன் தன்னில் நிலை பெற்றவன் ஆகிறான்.

யோப்ஸூ நாவம் ப்ரதிஷ்டிதாம் வேத ப்ரத்யேவ திஷ்டதி
யாரொருவன் நீரில் நிலைபெற்றுள்ள ஓடத்தை அறிகிறானோ அவன் அதிலேயே நிலை பெறுகிறான்.

ஓம் ராஜாதி ராஜாய ப்ரஸஹ்ய ஸாஹினே நமோ வயம் வைச்ரவணாய
குர்மஹே ஸ மே காமான் காமகாமாய மஹ்யம் காமேச்வரோ
வைச்ரவணோ ததாது குபேராய வைச்ரவணாய மஹா ராஜாய நம :

**விளக்கம்**

தலைவர்களுக்கெல்லாம் தலைவனும், பெரும் வெற்றிகளைக் கொடுப்பவனுமான குபேரனை நாங்கள் வணங்குகிறோம். விருப்பங்களை நிறைவேற்றுபவனும். செல்வத்தின் தலைவனான அவன் என் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு எனக்குத் தேவையான செல்வத்தைக் கொடுக்கட்டும். செல்வத்தின் தலைவனான குபேரனுக்கு மன்னாதி மன்னனுக்கு வணக்கங்கள்.

---

# புண்ணியத்தின் பலன் எத்தனை தலைமுறையை காக்கும்

| | |
|---|---|
| **கங்கை போன்ற புனித நதியில் நீராடுவது** | **: 3 தலைமுறை** |
| **பாழடைந்த கோவிலில் தீபம் ஏற்றுவது** | **: 5 தலைமுறை** |
| **கோவில் திருப்பணிக்கு உதவுவது** | **: 7 தலைமுறை** |
| **ஏழை பெண்ணுக்கு திருமணம் செய்வது** | **: 9 தலைமுறை** |
| **கோசலைக்கு உதவுவது, பசு பராமரிப்புக்கு உதவுவது** | **: 13 தலைமுறை** |
| **காசி, கயாவில் செய்யப்படும் தர்ப்பணம்** | **: 16 தலைமுறை** |
| **பசிக்கு உணவு அளிப்பது அன்னதானம்** | **: 27 தலைமுறை** |

# பஞ்ச சபைகள்

ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெரும் ஜோதியான சிவபெருமானின் திருவடிவங்களிலே இன்றியமையாதது நடராஜர் திருக்கோலமாகும். இப் பிரபஞ்சத்தின் இயக்கத்தை நடனத் திருக்கோலத்தின் வழியே வெளிப்படுத்தும் அற்புதக் கோலம் நடராஜப் பெருமானுடையது, வரும் 13.01.25 அன்று கொண்டாடப்படவுள்ள ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு நடராஜப் பெருமான் திருநடனம் புரிந்த ஐந்து சபைகள் பற்றி தெரிந்து கொள்வோம். இவை ரத்தின சபை, கனக சபை, வெள்ளி சபை, தாமிர சபை மற்றும் சித்திர சபையாகும்.

**இரத்தின சபை :**

சிவபெருமான் நடனக் கோலத்தில் நடராஜராக எழுந்தருளியுள்ள முக்கியமான சிவத்தலங்களுள் முக்கியமான ஐந்து தலங்களில் ஒன்று திருவாலங்காட்டில் அமைந்துள்ள வடாரண்யேசுவரர் கோவிலில் உள்ள இரத்தின சபையாகும். இங்கு நடராஜர் தனது இடது காலை உயரத் தூக்கிய நடனக் கோலத்தில் காட்சி தருகிறார். இத் தாண்டவக் கோலம் ஊர்த்தவ தாண்டவமாகும். சிவபெருமான் காளியை இத்தலத்தில் தனது நடனம் மூலமாக வெற்றி கொண்டார் என்கிறது ஸ்தல புராணம். காளியுடன் நடந்த நடனப் போட்டியில் காளி காதில் இருந்து விழுந்த காதணியை சிவபெருமான் தனது இடது காலால் எடுத்து காதில் மாட்டி வெற்றி கொண்டார். இறைவன் எட்டு கரங்களுடன், வலது காலை ஊன்றி இடது காலால் காதணியை மாட்ட ஆயத்தமாவது போல் இங்கே காட்சியளிக்கிறார். காரைக்கால் அம்மையார் தன் தலையால் நடந்து சென்று இங்குள்ள நடராஜரின் திருவடியில் அமர்ந்து அனுதினமும் அவரது திருநடனத்தை காணும் போறு பெற்றார். இங்கு இறைவன் ஆடும் நடனம் "ஊர்த்துவ தாண்டவம்" என்று போற்றப்படுகிறது. இங்கு விமானம் செப்புத் தகடு வேயப்பட்டு ஐந்து கலசங்களுடன் அமைந்துள்ளது. ஆருத்ரா தரிசனம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

**கனக சபை :**

பஞ்ச பூத தலங்களில் ஆகாயத் தலமாக விளங்கும் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோவிலில் அமைந்துள்ளது கனக சபையாகும். பெரும்பாலான சிவத் தலங்களில் சிவன் லிங்கவடிவில் அமைந்திருக்க இக் கோவிலில் நடனத்தின் தலைவராக நடராஜர் வீற்றிருக்கும் இடமே "பொற்சபை" என்று அழைக்கப்படுகிறது. இதனை "கனக சபை" என்றும் அழைக்கிறார்கள்.

கனக சபை என்பது தங்கத்தால் ஆன மன்றத்தில் பரதநாட்டியம் ஆடும் நடராஜர் சிலையைக் கொண்ட அரங்கமாகும். கனகம் என்பதற்கு தங்கம் என்றும், சபை என்பதற்கு அவை என்றும் பொருள். இறைவன் தனது பிரபஞ்ச நடனத்தை தைப் பூச நாளில் பதஞ்சலி மற்றும் வியாக்கிரபாத முனிவர்களுக்கு இங்கு தான் ஆடிக் காட்டி அருளினாராம். இங்கு நடராஜப் பெருமான் தனது இடது காலை ஊன்றி, வலது காலைத் தூக்கி நடனம் ஆடுகிறார். இந்த நடனம் "ஆனந்தத் தாண்டவம்" ஆகும். இறைவனின் திருநடனத்தை போற்றும் வகையில் ஆண்டு தோறும் இங்கு நாட்டியாஞ்சலி விழா நடைபெறுகிறது. ஆண்டுதோறும் ஆருத்ரா தரிசனம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

# சிவபெருமான் நடனமாடி சிறப்பித்த ஐந்து இடங்கள்




**வெள்ளி சபை :**

சிவபெருமானின் பல திருவிளையாடல்கள் நடைபெற்ற தலமாக மதுரை திகழ்கிறது. இங்குள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் தான் நடராஜப் பெருமானின் "வெள்ளி சபை" அமைந்துள்ளது. இதனை "வெள்ளியம்பலம்" என்றும் அழைப்பார்கள். இங்கு அருள் பாலிக்கும் பெருமான் தன் பக்தனான பாண்டிய மன்னனுக்காக வலது காலை ஊன்றி, இடது காலை தூக்கி நடனம் புரியும் நிலையில் காட்சி தருகிறார். சபை முழுவதும் வெள்ளியால் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு இறைவனின் நடனம் "சந்தியா தாண்டவம்" என்று அழைக்கப்படுகிறது.

**தாமிர சபை :**

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் அமைந்துள்ளது நடராஜப் பெருமானின் தாமிர சபையாகும். கலை நயம் மிக்க இந்த அம்பலம் நெல்லையப்பர் கோவிலின் உட்புறம் அமைந்துள்ளது. ஆருத்ரா தரிசன விழாவின் போது இங்கு நடராஜர் மற்றும் சிவகாமியின் உருவச் சிலைகளுக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. சந்தான பாரதி என அழைக்கப்படும் நடராஜர் தாமிர சபைக்குப் பின்புறம் உள்ளார். சந்தனத்தால் அலங்காரம் செய்யப்பட்ட இவரை தாமிர சபை வழியாகப் பார்க்கும் காட்சி மிகவும் அழகாக இருக்கும். பெரிய சபாபதி என்ற மற்றொரு சன்னதியும் இக் கோவிலில் நடராஜருக்கு உள்ளது. இந்த உற்சவ மூர்த்தி கோவிலுக்கு வெளியே எடுத்துச் செல்லப்படுவதில்லை. இத்தலத்தில் இறைவனின் தாண்டவம் "முனித் திருத்தாண்டவம், காளிகா தாண்டவம்" என்றும் அழைக்கப்படுகிறது. தாமிரத்தால் ஆன இச்சபையில் இறைவன் நான்கு கரங்களுடன் இடது காலை ஊன்றி, வலது காலை தூக்கி நடனம் புரிகின்றார்.

**சித்திர சபை :**

தமிழகத்தில் சிவபெருமான் நடனமாடிய பஞ்ச சபைகளுள் மிகவும் பழமையானது சித்திர சபையாகும். குற்றாலம் திருக்குற்றலநாதர் கோவிலின் துணைக் கோவிலான சித்திர சபை, குற்றாலநாதர் கோவிலுக்கு வடக்கு பகுதியில் ஐந்தருவிக்கு செல்லும் வழியில் உள்ளது. தமிழகத்திலுள்ள ஐந்து சபைகளுள், சித்திர சபை மட்டுமே பஞ்ச பூதங்களையும் அடக்கி ஆளும் வகையில் அமைந்துள்ளது. இதனை சித்திர மன்றம், சித்திர அம்பலம் என்றும் அழைக்கின்றனர். மற்ற நான்கு சபைகளிலும் விக்கிரகமாக காட்சியளிக்கும் நடராஜர் இங்கு சித்திரம் (ஓவியம்) வடிவில் காட்சியளிக்கிறார்.

இறைவனின் திரு நடனத்தை கண்டு களித்த பிரம்மதேவன் ஆதி சக்தி, சிவபெருமானுடைய சொரூபங்களைச் சுவரில் சித்திரமாக வரைந்து வைத்தார். இதனால் இச் சபையை "சித்திர சபை" என்று அழைத்தனர். தேவர்கள் தினமும் வந்து சித்திர சபையை தரிசித்து செல்கின்றனர் என்பது நம்பிக்கையாகும். இச்சபையானது பிரமிடு போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற் கூரை தாமிரத் தகடுகளால் உருவாக்கப்பட்டுள்ளது. இச் சபையில் உள்ள சுமார் 600 ஆண்டுகளுக்கு முந்தைய ஓவியங்கள் மூலிகைகளால் வரையப்பட்டவை. திரிகூட மலைக்கு வந்து பிரம்மா மற்றும் தேவர்களும் தவம் செய்ய அவர்களுக்காக இறைவன் தரிசனம் தந்தார். இங்கு நடை பெற்ற தாண்டவம் "திரிபுர தாண்டவம்" என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. சபையில் நடராஜ பெருமான் தேவியருடன் எழுந்தருளியுள்ளார். மார்கழி திருவாதிரை திருவிழாவின் போது முதலில் சித்திர சபையில் பூஜைகள் நடைபெற்ற பின்னரே, குற்றாலநாதர் கோவிலில் பூஜைகள் நடத்தப்படும். இவ்வாறு பஞ்ச சபைகளிலும் நடனம் புரியும் நடராஜப் பெருமானை கண்டு வணங்கி வாழ்வில் வளம் பெறுவோம்.

........ ஹேமலதா க்ருஷ்ணகுமார்

ASTROLOGY
VASTU CONSULTANT
PERFECT VASTU FOR
HOME FACTORY OFFICE.
MANY CLIENTS
BENEFITTED WITH VASTU
PREDICTIONS WITH US.
ONLY WITH APPOINTMENT
94441 64859

# ஸ்ரீரங்கம் பெருமாளுக்கு அணிவிக்கப்படும் பாதுகைகள்



பழைய திருவடி



இந்த வருடத்தினுடைய
புதிய திருவடி

இந்த படங்களில் உள்ள காலணிகளுக்கு பூ வைத்து உள்ள காரணம் தெரியுமா? ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டுள்ள பெரிய பெருமாள் அணிந்துகொண்ட பாதுகைகள் தேய்மானத்திற்கு பின் கழட்டி வைக்கப்பட்டு ஸ்ரீரங்கம் திருக்கொட்டாரம் எனும் இடத்தில் தூணில் மாட்டி வைக்கப்படும். அந்த பாதுகைகளுக்கு தான் பூ வைத்து வழிபட்டு வருகிறார்கள்.

புதிய பாதணிகள் பிரத்யோகமாக அரங்கனுக்காக செய்பவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் இருக்கிறார்கள். வலது பாதணி ஒருவரிடமும், இடது பாதணி மற்றொருவரிடமும் செய்ய கொடுப்பார்கள். இருவரும் ஒரே ஊரில் இல்லாமல் வெவ்வேறு ஊர்களில் இருப்பவர்கள் பாதணிகள் தனித்தனியாக செய்வார்கள். 48 நாட்கள் உணவு கட்டுப்பாடு இருந்து, விரதம் மேற்கொண்டு பாதணிகளை செய்வார்கள். இந்த பாதுகைகளை 6 மாதத்திற்கு ஒரு முறை மாற்றுவார்கள்.

இவர்கள் பாதணிகளை கொண்டு வந்து அரங்கனுக்கு சமர்ப்பிக்கும்போது கோயில் மரியாதையை செய்வார்கள். பழைய பாதணிகளை அரங்கன் திருவடிகளை விட்டு கழட்டிவிட்டு, புதிய பாதணிகளை மாற்றிவிடுவார்கள். அதிசயமான விஷயம் என்னவென்றால் திருவடிகளை விட்டு எடுத்துள்ள பழைய பாதணிகளில் இரண்டிலும் பாத பகுதிகளில் தேய்மானம் இருக்கும்.

இவ்வாறு மாற்றியுள்ள தேய்மானம் அடைந்த அரங்கன் பாதணிகள்தான் புகைபடத்தில் காணலாம். ஸ்ரீரங்கம் கோவில் சென்றால் யார் வேண்டுமானாலும் இந்த அரங்கன் அணிந்து தேய்மானம் கண்டுள்ள பழைய பாதணிகளை கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம்.

# KRISHNA DELISH COFFEE




எங்களிடம் தரமான
காபி கொட்டை
அரைத்து தரப்படும்

2025
HAPPY NEW YEAR
&




## 1 கிலோ காபி பவுடர்
## ரூ 760 மட்டுமே

## நம்ம ஆத்து காபி
## FILTER COFFEE RS.15 only

COFFEE POWDER
DOOR DELIVERY FREE
ALSO AVAILABLE

* Condition Apply

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

# இனிய புத்தாண்டு
மற்றும்
# பொங்கல் திருநாள்
நல்வாழ்த்துக்கள் !

மயிலாப்பூர்
## கணபதிஸ்®
ஸ்தாபிதம் 1942

## வெண்ணெய் & நெய்

**பாரம்பரியமாக 1942 முதல்**

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@myaporeganapathys.com



ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com

